

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



சென்னை கம்பன் கழகத்தின் ‘பொலிவுமிகு பொன்விழா 51 நிறைவு விழா’விற்கான அழைப்பிதழை, முகாம் அலுவலகத்தில் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் முன்னாள் ஒன்றிய அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. அவர்கள் வழங்கினார். துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் உடன் இருந்தார்.

### கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, - சாலை விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூர் திருமதி சரிதா குடும்பத்திற்கு


# தி.மு.க. சார்பில் ரூ.10 லட்சம் நிதி!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.4 -

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக் குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூர் திருமதி சரிதா குடும்பத்திற்கு தி.மு.க. சார்பில் ரூபாய் 10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார்.**







மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்.” என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில் கடந்த 2.6.2025 அன்று கழக உறுப்பினரான திருமதி சரிதா அவர்கள், தனது சொந்த ஊரான இறையனூர் கிராமத்தில் செல்வதற்கு திண்டிவனத்தை கடந்து சென்றபோது, செயின்ட் ஜோசப் பள்ளி எதிரே உள்ள சர்வீஸ் சாலை பக்கத்தில் இருசக்கர வாகனம் மோதி, பின் மண்டையில் பலத்த அடிபட்டு, ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

அவரது குடும்ப நிவாரண நிதியாக, ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையினை, முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், திருமதி சரிதா அவர்களின் கணவர் எஸ்.கண்ணன் அவர்களிடம் நேற்று (02.08.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

### “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”

# ஒவ்வொரு குடும்பத்தின் நலத்திலும் அக்கறை கொண்டிருக்கிறது ‘திராவிட மாடல்’ அரசு!

### ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத் தொடக்கத்தையொட்டி – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப்பதிவு!



சென்னை, ஆக.4 -

**'நலம் காக்கும் ஸ்டாலின்' கழக அரசின் திட்டத்தை முதல்வர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்ததையொட்டி வலைதளத்தில் பதிவிட்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “ஒவ்வொரு குடும்பத்தின் நலத்திலும் திராவிட மாடல் அரசு அக்கறை கொண்டுள்ளது” என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது வலைதளப் பதிவு வருமாறு:-

வளர்ந்து வரும் நாடுகளுக்குச் சவாலாக இருக்கும் தொற்றா நோய்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தை இன்று முதல் தொடங்குகிறது திராவிட மாடல் அரசு.

சென்னை மயிலாப்பூர் பகுதியில் இத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருத்துவப் பரிசோதனை முகாமை நமது முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த நிகழ்வில் நாம் பங்கேற்றோம்.

விளிம்புநிலை மக்களின் உடல் நலனைக் கருத்தில் கொண்டு மாநகராட்சி, ஊரகப் பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப் படவுள்ளது.

முன்கூட்டியே பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் நோய்களில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ள முடியும் என்கிற அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் 1,256 பரிசோதனை முகாம்கள் நடைபெறவுள்ளன.

வாட்ஸ் அப் மூலம் அன்று மாலையே பரிசோதனை முடிவுகளும் தெரிவிக்கப்படும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற வகையில் ஒவ்வொரு குடும்பத்தின் நலத்திலும் அக்கறை கொண்டிருக்கிறது தமிழ்நாடு அரசு.

ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறுகிற இந்த முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள என் அன்பும், வாழ்த்தும்!

இவ்வாறு அப்பதிவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### சட்டப் பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்வதையே வாடிக்கையாகக் கொண்ட எதிர்க்கட்சி தலைவர்

# எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் இருக்கிறார்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் காட்டமான அறிக்கை!



சென்னை, ஆக.4 -

**தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்பதே அறியாதவராக இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சாதனைகளை விளக்கி அமைச்சர் தா.மோ.அன்பசரன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு :-

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கோவில் பட்டியில் 1.08.2025 அன்று தீப்பொட்டி உற்பத்தியாளர்கள், கடலை மிட்டாய் உற்பத்தியாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் லைட்டரை தடை செய்ய அ.தி.மு.க. முயற்சி எடுக்கும் எனவும், கடலை மிட்டாய் உற்பத்திக்கு தேவையான உதவிகளை செய்யும் எனவும், தெரிவித்துள்ளார்.

10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தீர்க்கப்படாத இந்த பிரச்சனை குறித்து, கழக அரசு பொறுப்பேற்றப் பின் தமிழக முதல்வர் அவர்கள் தீப்பொட்டி உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று லைட்டர்கள் இறக்குமதிக்கு தடை விதிக்குமாறு 08.09.2022 அன்று, மாண்புமிகு ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சருக்கு கடிதம் எழுதினார், தமிழக அரசின் தொடர் அழுத்தத்தின் காரணமாக ஒன்றிய அரசு 29.06.2023 அன்று ரூ.20க்கும் குறைவான Pocket Lighters Gas Fuel & Nonrefillable ஆகியவற்றிற்கு இறக்குமதி செய்ய தடை விதித்தது. இருப்பினும், மற்ற நாடுகளில் இருந்து லைட்டர்கள், உதிரிபாகங்களாக, இந்தியாவுக்குள் சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்டு, லைட்டர்களாக பொருத்தப்பட்டு மீண்டும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால் தீப்பெட்டி தொழிலின் உள்நாட்டு வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதுகுறித்து மீண்டும் ஒன்றிய அமைச்சர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் 13.10.2024 அன்று பாக்கெட் லைட்டர்களின் பாகங்கள், gas fuelled, nonrefillable or refillable lighters (சிகரெட் லைட்டர்கள்) ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடு விதித்து அறிவித்துள்ளது.

ரஷ்யா, உக்ரைன் போர், அமெரிக்கா பொருளாதார கட்டுபாடு காரணமாக பொட்டாசியம் குளோரைடு இறக்குமதி தடை செய்யப்பட்டது, தீப்பெட்டி தொழில் பாதிப்பு அடைந்த போது தமிழக அரசு துரிதமாக செயல்பட்டு சென்னை பெட்ரோ கெமிக்கல் மூலம் மொத்தமாக கொள்முதல் செய்து தீப்பெட்டி தயாரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த பிரச்சனைகள் குறித்து சட்டமன்ற கேள்வி நேரத்தின் போதும், முன்னாள் அமைச்சர் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கடம்பூர் ராஜு கொண்டு வந்த சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீதும் பல முறை பதில் அளித்துள்ளேன். 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியின் அலங்கோலத்தால் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்வதையே வாடிக்கையாக கொண்ட எதிர்கட்சி தலைவருக்கு கழக அரசின் நடவடிக்கை எல்லாம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

உலகம் அறிந்த கோவில்பட்டி கடலை மிட்டாய், உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு பிப்ரவரி 24 ஆம் தேதி கோவில்பட்டி பகுதியில் கடலை மிட்டாய் குறுங்குழுமம் அமைக்கப்படும் என அறிவித்தார். அதன்படி ரூ.6.42 கோடி அரசு மானியத்துடன், ரூ.7.13 கோடி மதிப்பீட்டில், கடலை மிட்டாய் உற்பத்திக்கான பொது வசதி மையம் அமைக்க, சமூக நல மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் மாதத்திற்குள் இத்திட்டம் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

தொழில் வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில் ஒவ்வொரு திட்டமும் கடைக்கோடி மக்களுக்கு சென்றடையும் வண்ணம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. MSME துறைக்கு கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் ரூ.3 ஆயிரத்து 617 கோடியே 62 லட்சம் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் கழக அரசு பொறுப்பேற்றபின் முதல்வர் அவர்கள், இந்த 5 ஆண்டுகளில் மட்டும், ரூ. 6 ஆயிரத்து 626 கோடி நிதி ஒதுக்கி 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதியை விட 2 மடங்கு நிதி வழங்கி MSME துறையை தூக்கி நிறுத்திய பெருமை நம் முதல்வருக்கு உண்டு. ஆட்சி பொறுப்பேற்று 4 ஆண்டு காலத்தில் 5 சுய வேலைவாய்ப்பு திட்டங்களின் கீழ். 2 ஆயிரத்து 57 கோடியே 90 லட்சம் மானியம் வழங்கப்பட்டு. 5 ஆயிரத்து 301 கோடியே 63 லட்சம் வங்கி கடனுதவி வழங்கி 63 ஆயிரத்து 14 புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் எதிர் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசி வருகிறார்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அழியாநிலையில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களை வழங்கினார். உடன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நல்லாட்சி தொடர்ந்திட தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தலைமையே தேவையென கருதி அம்மா மக்கள் முன்னேற்றக் கழக கட்சியைச் சார்ந்த நாமக்கல் தெற்கு மாவட்ட செயலாளர் முத்து சரவணன், மாவட்ட துணை செயலாளர் நவலடி லோகேஸ் ஆகியோர் தலைமையில் வெங்கரை பேரூர் செயலாளர் கே.ராதாகிருஷ்ணன், மாவட்ட பொறியாளர் அணி செயலாளர் எஸ்.யுவராஜ், மாவட்ட மாணவரணி துணை செயலாளர் சபிக்கூர் ரஹ்மான், மாவட்ட அண்ணா தொழிற்சங்கம் மு.தண்டபாணி, மாவட்ட ஓட்டுனர் அணி செயலாளர் வேல்முருகன், மாவட்ட சிறுபான்மை அணி செயலாளர் அப்துல் ரசாக் ஆகியோர் அ.ம.மு.க.விலிருந்து விலகி முன்னாள் அமைச்சரும், மண்டல பொறுப்பாளருமான வி.செந்தில் பாலாஜி, நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் தனராசு, பேரூர் செயலாளர்கள் முருகன், கருணாநிதி, ரமேஷ் பாபு, சோமசுந்தரம், தளபதி சுப்பிரமணியம், சரவணன், கழக நிர்வாகிகள் எஸ்.கே.வி.கருணாநிதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.